
கறுப்புப் பாதிரி
மர்மம்!
ரூ. 1/-
மினி
லயன்


ஜூன் மாதம்
வருகிருர்.....
டாக்டர்
ஜஸ்டின்!
மினி
லயன்


கருப்புப் பாதிரி மர்மம்
விடிகாலை மூடுபனி இன்னமும் முழுமையாக விலகாத இதமான இளங்காலை வேளையில் இங்கிலாந்தின் கிழக்குக் கடலோரப் பகுதியில்-நீரைக் கிழித்துக் கொண்டு விரைந்தன இரண்டு விசைப் படகுகள்...
ராட்சஸ அலைகள்-கடல் கொந்தளிப்-பது போல்!
'புயல் வேக இரட்டையர்கள்' என்ற பெயர் வாங்கிய-வர்களாயிற்றே!


ஸாண்டியும், ஜோவும் ஸ்டண்ட் வேலைகளில் நடிக்கும் நடிகர்கள்...
கதி கலங்கிப் போய் விட்டார்கள் ஜோ!
இன்னும் கொஞ்சம் சீண்டிப் பார்க்கலாம்-வா!


ஒரு படப்பிடிப்பில் செய்தோமே அது போல் படகை பறக்க விடுவோம்!


மறுகணம்-
பறக்குது மேலே!
ஹா...ஹ்ஹா!
செத்தேன்!


வந்த வேகத்திலேயே திரும்பிச் சென்று விட்டன படகுகள்...
பயந்தாங் கொள்ளிகள்!
நல்ல வேடிக்கை! அட்டகாசம்-போ!
டேய்...... உங்களே-



நீண்ட சதுப்பு நில கால்வாய் பெரிய மலையில்போய் முடிந்தது...
உன் புதிய கண்டு பிடிப்பான 'சுருக்குக் கயிறு' துப்பாக்கியை பரிசோதனை செய்ய ஏற்ற இடம்...!
தயாராகவே வந்திருக்கிறேன்!
திடீரென்று, வேறொரு கால்வாய் பகுதி-யிலிருந்து வெளிப்பட்டது இன்னொரு விசைப் படகு...
உஷ்ஷ்ஷ்...! ஆட்டம் சூடு பிடிக்கிறது!
விடாதே விரட்டு! நாம் சளைத்தவர்-களில்லை என்று உணர்த்துவோம்!
செல்வச் சீமான் டைஸன் தனக்குள் சிரித்துக் கொண்டார்-
புயல் வேக இரட்டையர்கள்! என் 'ஸோம்பி' யின் வேகத் திறனை சோதித்தறிய நல்ல வாய்ப்பு!


விரட்டிக் கொண்டு வந்தனர் இரட்டையர்கள். ஆனால் 'ஸோம்பி' பயங்கர வேகத்தில் பறந்தது-
சர்ர்ர்ர்
இடைவெளி அதிகரிக்கிறது - ஜோ - மனமுடைந்து போவான்!
நானல்ல–திறன் குறைவான என் மோட்டார்தான் காரணம்!
அப்போது-திடீரென்று எங்கிருந்தோ வந்து முளைத்த நான்காவது படகு ஒன்று அந்த வேகப் பந்தயத்தில் கலந்து கொண்டது—
விர் ர்ர்ர்ர்...ர்ர்ர்ர்...ர்ர்ர்ர்


அச்சுறுத்தும் தோற்றமுடைய அந்தப் படகு, முன்னால் விரைந்த படகை குறி வைத்து பாய்ந்தது-
வீவீர்ர்
ZOMBIE
ஆ—ஐயோ! கரும் பூதம்! டைஸன் வம்சாவளி-யினரை பலி கொள்ளும் பரம்பரை சாபக்கேடு!


இரட்டையர்கள் துணுக்குற்றனர்—
எவனோ, அந்தப் படகைமோதிக் கவிழ்க்க முயற்சிக்கிறான்—பார்!
Sandy
படகை செலுத்து பவன், சன்னியாசி மாதிரி கறுப்பு அங்கி அணிந்திருக்கிறான்!


பீதி வயப்பட்ட டைஸன் நிலைகுலைந்து தடுமாறினார்-
ஆ ஆ ஆ—!


கட்டுப் பாடிழந்த அவருடைய படகு ஏரியின் கரையாக நின்ற கற்சுவரை நோக்கிப் பாய்ந்தது-
ஜோ-நீ அந்த சன்னி-யாசியை-கவனி—
ZOMBIE
நீ அந்த நபரை காப்பாற்ற முயற்சி செய்-படகு சுவரில் மோதி-னால் மரணம் உறுதி!


ஸாண்டி எழுந்து கொண்டான்-
படகு போய் சுவரில் மோதுவதை தவிர்க்க அவகாசமில்லே.
Sandy
விசேட துப்பாக்கி ஒன்றை பயன்படுத்தி சுருக்குக் கயிற்றை வீசினன் ஸாண்டி-
என் குறி தவறி-ஞல்... அது அவருடைய துரதிர்ஷ்டம்
ஸ்ஸ்ஸ்
ZOMBIE


சுருக்கு வளையம் கச்சிதமாக இலக்கின் மீது இறங்கியது—
அப்பாடா இனி நான் நிம்மதி-யாக மூச்சு விடலாம்!
Sandy
ZOMBIE


மறுகணம்—சுவரில் மோதிய படகு பயங்கர ஓசையோடு சுக்கல் சுக்கலாகிப் போனது—
மடார்!
கண்களைத் திறக்கலாம் தோழரே—இன்னும் உயிரோடுதான் இருக்கிறீர்!



விபரீதம் விளைவிக்க வந்த அன்னிய படகை விடாது துரத்திச் சென்றான் ஜோ...
இதோ நெருங்கிவிட்டேன்—என் கையில் அகப்பட்டவுடன் உன்னை என்ன செய்கிறேன் பார்!
THE LACK PRIOR




இடைவெளி குறைந்து கொண்டே வந்தபோது—
அட—மாயமாக மறைந்து விட்டானே! ஆவ்!எதிரே மேல் மட்டத்தின் மேலே குத்துக் கட்டைகள் நீட்டிக் கொண்டிருக்கின்றன... திருப்பத்தில் இருந்ததால் கவனிக்கத் தவறிவிட்டேன்
JOE


சட்டென்று சுக்கானை அழுத்தி தாமதியா-மல் வெளியே பாய்ந் தான் ஜோ...
இம்முறை நான் வேடிக்கைக்காக செய்யவில்லை இதை!
படகு கரையோரம் போய் ஒதுங்கியது-
JOE
இதையே சினிமா படப்பிடிப்பில் செய்திருந்தால் கணிசமான தொகை கையில் கிடைத்திருக்கும்.


சேதமுற்ற தன் படகை
இழுத்துக்கொண்டு
ஸாண்டியிடம் வந்-
தான் ஜோ...
என்ன ஜோ...
வெற்றிதானே...
வா, லார்டு
டைஸனை
உனக்கு அறி-
முகம் செய்து
வைக்கிறேன்
வெற்றியா...?
அங்கே நான்
மரணத்தோடு
கைகுலுக்கி
விட்டு
வருகிறேன்


என்னை காப்பாற்றிய உங்-
களுக்கு எப்படி நன்றிசொல்
வதென்றே தெரியவில்லை...
'கரும்பூதம் எங்கள் குடும்-
பத்தின் மரண தூதுவன்
என்ற நம்பிக்கை!
அதைப் பற்றி
முழு விபரமும்
அறியத்
துடிக்கிறேன்


டைஸனின் மாளிகையை
நோக்கி மூவரும்
நடந்தார்கள்-
என் முன்னோர்கள் ஒவ்வொரு
வருக்கும் மரணம் சம்பவிக்கு முன்
இதே போல் கரும்பூதம் அவர்-
கள் எதிரே தோன்றியிருக்கிறது-
அந்த வரிசையில்
இப்போது நான்.


மாளிகை
யினுள்-
கூடுதல் திறன் கொண்ட
விசைப் படகை நானே
வடிவமைக்கிறேன். விசைப்
படகு போட்டியில் எப்படி-
யேனும் சாம்பியன் பட்டத்தை
பெற்று விடுவது என் இலட்சியம்
ஆனால் அந்த இலட்சியம் நிறை
வேறும் வரை உயிரோடிருப்
பேனா என்பது தான்
கேள்வி-
கவலையை விடுங்கள்-
இனி, உங்களை பாது
காக்கும் பொறுப்பு
எங்களுடையது!


கரும் பூதத்தின் பிரம்மாண்டமான ஓவியத்தின் அருகே—
உங்கள் பேச்சு எனக்கு நம்பிக் கையூட்டுகிறது!
உங்கள் படகை நானும், ஸாண்டியும் செலுத்தி, சாம்பியன் பட்டத்தை சுலபமாக தட்டிக்கொண்டு வந்து விடுவோம். பேய், பிசாசுகள் எங்களை கலவரப் படுத்த முடியாது!
மாறாக நாங்கள் அவற்றை நேசிக்கிறோம்!


இரகசியமாக ஜோவின் காதில் கிசுகிசுத்தான் ஸாண்டி-
ஜோ—நீ துரத்திச் சென்ற படகில் இருந்த உருவம் மாயமாக மறைந்து விட்டதா—அல்லது தப்பிச் சென்று விட்டதா?
அதிர்ச்சியடையாதே அது மாயமாக மறைந்துபோய் விட்டது— என்பது தான் நான் கண்டது!


ஜன்னலை திறந்த
டைஸன் அலறினார்-
ஆவ்—ஐயோ—அதோ
அங்கே வெளியில்
கரும்பூதம் நின்று
கொண்டிருக்கிறது!
அப்படியா?


மேலே சுட்டிக் காட்டியவாறு
நின்று கொண்டிருந்தது
அந்த சைத்தான்—
ஒதுங்கிக் கொள் ஜோ!
இந்தத் தடவை அதனோடு
மோத வேண்டியது
என்னுடைய முறை!


ஸ்டண்ட் வேலைகளில் நிபுணனான ஸாண்டி மின்னல வேகத்தில் வெளியே பாய்ந்தான்...
ஐயோ-பூதம் அவனை கொன்று விடுவது உறுதி!
ஏய்—ஓடிப் போய் விடாதே—நில்! மோதிப் பார்த்து விடலாம்!
தாழ்வான கூறை மீது தரையிறங்கிய ஸாண்டி கணமும் தாமதியாது தன் பயணத்தை தொடர்ந்தான்—
ஆவ்-வ்!
கண்டு கொள்ளாதீர்கள் டைஸன்! இந்த சர்க்கஸ் வேலை எல்லாம் பயலுக்கு அத்துபடி!


ஆனால்—ஸாண்டி இறுதியில் பூதத்தை இலக்கு வைத்து பாய்ந்த போது—
ஆவ்! பயங்கரம்! மாயமாக மறைந்து விட்டதே!


இருபது கஜ தொலைவில் மறுபடியும் உருப்பெற்றது அந்த சைத்தான்—
ஸாண்டி—என்ன ஆச்சு உனக்கு? இதோ நானும் கீழே வருகிறேன்!
வேண்டாம்! இங்கே வராதே! டைஸனுக்கு துணையாக அவ-ருடனேயே இரு! கரும் பூதம் வஞ்சகமாக நம்மை அவரிட மிருந்து பிரிக்க முயற்சிப்ப தாக தோன்றுகிறது!



இதை ஸாண்டி சொல்லிக் கொண்டிருக்கும் போதே, உள்ளே கரும் பூதத்தின் பிரம்மாண்டமான சித்திரம் சுவரிலிருந்து சரிந்து விழுந்தது...
ஆ-ஐயோ!
படார்
டைஸனின் மீது விழுந்ததோ- மனிதர் செத்துப் போவது உறுதி!
மின்னல் வேக செயல் திறன் மட்டுமின்றி உடலுறுதியிலும் ஜோ நிகரற்றவன்-
அம்மாடி— எவ்வளவு கனம்- நீங்களானால் நிச்சயம் நசுங்கிப் போயிருப்பீர்கள்- டைஸன்!
கரும்பூதத்தின் இரண்டு முயற்சிகள் முறியடிக்கப்பட்டு விட்டன—ஒரே நாளில்!
அதன் பின், சில வாரங்களுக்கு எந்த அசம்பாவிதமும் நிகழவில்லை-
நாங்கள் இடையே புகுந்ததால் உங்களுடைய குடும்ப சாபக்கேட்டின் வழக்கமான போக்கு முறியடிக்கப்பட்டு விட்டது என்று நினைக்கிறேன்!
ZOMBIE II
ஆமாம்—இன்னமும் நான் உயிரோடு இருப்பதே, சான்று!


இடைப்பட்ட நாட்களில் டைஸன் செய்து முடித்த ஸோம்பி II பரிசோதனை ஓட்டத்துக்கு தயாராக நின்றது–
கோட்டை விட்டு விட்டு, வேண்டுமென்றே விட்டுக் கொடுத்தேன் என்று பிறகு சப்பைக்கட்டு காட்டாதே!
மட்டம் தட்டுகிறாயா! விவாதத்தை பிறகு வைத்துக்கொள்ளலாம்!


பரவாயில்லையே...! டைஸனின் சார்பில் சாம்பியன்ஷிப் போட்டியில் ஓட்ட இந்தப் படகையே வைத்துக்கொண்டு விடலாம்!
ம்... இன்னும் வேகமாக போ!


விநாடிக்கு விநாடி வேகம் அதிகரித்துக் கொண்டே போனது...
பிரமாதமாகப் போகிறது!
நெருங்கவே முடியாது அவர்களால்!


ஏரிப்பகுதியில் கரையோரமாக நின்று உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தது ஒரு உருவம்...
விர்..ர்ர்ர்...ர்ர்!


எல்லைக் கோடு மிதவைகளினூடே பாய்ந்து புகுந்து பறந்து கொண்டு சென்றான் ஜோ,
ஹாய்... என்னமாய் பறக்கிறது! தூள்!
ZOMBIE
அப்போது—
ஜோ யாரோ எல்லைக்கோடு மிதவைகளை இடமாற்றி யிருக்கிறார்கள்... வேகத் தை மட்டுப்படுத்து... உடனே மட்டுப் படுத்து!


அந்த எச்சரிக்கை ஜோவின் செவியை எட்டவேயில்லை—
ZOMBIE
அட அதே சைத்தான்—மறுபடியும் எதிரே வந்து நிற்கிறதே முந்—தைய இரு சந்தர்ப்பங்களிலும் மாயமாக மறைந்தது போல் இம்முறையும் போய் விடுமோ-மோதிப் பார்த்து விட வேண் டியதுதான்!


கரையில்-
இம்முறை அது காற்றில் கரைந்து போகப் போவ—தில்லையடா மடையா! டைஸன் சாபக்கேட்டுக்கு வீணாக நீயும் இப்போது பலியாகப் போகிறாய்!


ஹே... இது மாயத் தோற்றமல்ல, திட உருவம்! சட்டென்று நான் ஏதாவது யுக்தி செய்தாலன்றி செத்துப்போவது நிச்சயம்!
ZOMBIE II


ஸாண்டியும் டைஸனும் கலவரத்தோடு- வெறித்தனர்...
ஜோ அது ஏதோ சதிவலே-வேண் டாம் பிடிவாதம்!
போய் அதன் மீது மோதப் போகிருன்!


சட்டென்று சுக்கானே வளேத்தான் ஜோ...
வெடித்துச் சிதறு- கிறதுஏதோ—சூட்சும வெடியமைப்பு போலும் அது...!
கவலேப்படாதீர் கள் – பயல் சமாளித்து விடுவான்!
மால்!
OMBIE II


படகு சின்னாபின்னமாகிப் போனது... ஆனால் ஜோ தப்பித்துக் கொண்டான்
என்ன ஜோ—கை கால்கள் எல்லாம் எண்ணிக்கை சரியாக இருக்கின்றனவா?
கடைசி வினாடியில் சுதாரித்துக் கொண்டு விட்டேன்!


சே—தப்பித்துக் கொண்டு விட்டான்! அடுத்த முறை கவனித்துக் கொள்கிறேன் - ஹூம்!
ஹேய்-ஏறாதே-நீந்தி வா—நீ! டைஸன் படகை ஓட்டி வரட்டும்—அங்கே நிற்கிறது பார்-கரும்பூதம்!
ஊப்ப்ப்-ப்!


படகு கரையை நெருங்கிய போது—
சும்மா ஆர்ப்பாட்டம் பண்ணாதே! எனக்கு மட்டும் எப்போதுமே பணியில் கஷ்டமான பங்கா?
டார்ஜானுக்கு 'டூப்' பாக நான் நடித்த போது பாய்ந்த— பாய்ச்சல்- இப்படித் தான்!


ஓரிரு நிமிடங்களுக் குப் பின்—
சைத்தானே— வகையாக அகப் பட்டுக் கொண்டு விட்டாய் என்— னிடம்! எப்படி குத்து விடுகி- றேன்-பார்!
ஏய்—எனக்கும் கொஞ் சம் மிச்சம் இருக் கட்டும்!


ஆனால் ஸாண்டிக்கு, அங்கே காத்துக் கொண்டிருந்தது ஓர் அதிர்ச்சி-
அட—அது ஒன்றும் மாயப் பிசாசு அல்ல!
மறுபடியும் ஏதேனும் சூழ்ச்சியா?
பூதம் எல்லா வேளைகளிலும் மாயவுரு கொண்டதல்ல! தன் உடுப்புகளை புதரின் மீது போட்டுச் சென்றிருக்கிறது!
சரி—முதலில் படகை கரை சேர்ப்போம்!
எனக்கொரு யோசனை தோன்றுகிறது—கரைக்கு வந்தபின் விபரமாக சொல்கிறேன்!


அந்த சைத்தான் எப்போதும் இங்கே கண்காணித்து வருவதாக தெரிகிறது! அப்படியானால் அதன் மறைவிடம் இங்கேதான் இருக்க வேண்டும்! சுலப மாக கண்டுபிடிக்க ஒரே வழி வானி-லிருந்து நோட்டமிடுவது தான்!
பிரமாதமான யோசனை! ஒரு கிளைடரை உபயோ கப் படுத்துவோம்!


அன்று மாலை-டைஸனின் மாளிகை சுற்றடைப்பு மைதானத்தில்—
கிளைடரில் ஏறிக் கொள் ஸாண்டி! நாங் கள் அதை மேலே எழுப்புகிறோம்-மேலே இருக்கும் போது புகைப் படங்களை எடு!


ஜீப் வேகம் பிடித்ததும்—
ஸாண்டிக்கு விபரீதமாக ஏதும் ஏற்பட்டு விடாதே?
சமாளித்துக் கொள்வான்!


இணைப்பை விடுவித்தான் ஸாண்டி - 90 அடி உயரம் எழுப்பிய பின்!
வேட்டை வெற்றியடைய என் வாழ்த்துக்கள்! கிளை—டரை பத்திரமாக கொண்டு வந்து சேர்!
ஊய்ய் ய்!


சற்றுத் தள்ளி, கீழே-சற்று மறைவான பகுதியில்—
குறி வைப்பதில் வல்ல வர்கள் என்றீர்களல்- லவா—எங்கே-அந்த கிளைடரை சுட்டு வீழ்த் துங்கள் பார்க்கலாம்!
ஹலோ... ஸாண்டி! விவகாரமாக ஏதும் கண்ணில் படுகிறதா? இங்கே கீழே குறிப்பிடும்படியாக ஏதும் இல்லை- ஒரே அமைதியாக கிடக்கிறது!
ஏய்... என்ன- ஜோக் அடிக்கிறாயா?


சந்தேகாபஸ்தமாக எதுவும் தெரியவில்லே— வானில் இப்படி பறப்பது எவ்வளவு ஜாலியாக இருக்கிறது தெரியுமா?
ஆனால்— கீழே ...
கிளைடர் தரையில் வீழ்ந்ததும் உங்கள் கூலியை ரொக்கமாக பெற்றுக் கொள்ளலாம் நீங்கள்—
எடுத்து எண்ணி வைத்து விடுங்கள்— காரியம் முடிந்த மாதிரிதான்! உடனே மோட்டார் சைக்கிளில் நாங்கள் தப்பிச் செல்ல உத்தேசம்!
கரும் பூதம் நழுவி சில நிமிடங்களுக்குப் பின்—
டுமீல்!
ஒவ்வொரு தோட்டாவும் அவனுடைய சவப்பெட்டியில் அடிக்கப்படும் ஆணியாகும்— பறக்கும் சவப்பெட்டி... ஹா! ஹா! ஹா!


நம் முயற்சி வீண்போக வில்லை ஜோ- யாரோ என்னை குறி வைத்து தோட்டோவை அனுப்புகிறார்கள்!


சட்டென்று கிளை டரை திசை திருப்பி தாழப் பறக்க விட்டான் ஸாண்டி—
வீழ்த்தி விட்டோம்!
அவர்களை ஏமாற்றி விட்டேன்!


காணோமே? எங்கே போய்த் தொலைந் தான்?
கவலைப்படாதே! சரியாக அடித்து விட்டோம் என்- பது உறுதி
ஜோ... அவர்கள் என்னை இப்போது பார்க்க முடி- யாது- அருகே நெருங்கி என் ராக்கெட் துப்பாக்கி யை பயன் படுத்தப் போகிறேன்!
ஜீப்பை சாலையிலிருந்து விலக்கி குறுக்கு வழியில் விரட்டினான்-
விர்ர்!
ஸாண்டி என்னை விட கெட்டிக்காரன்- நூதன கருவிகளை உருவாக்கு வதில் மட்டுமின்றி தவறு செய்வதிலும்!


ராக்கெட் பிஸ்டல்
சீறியது—
ஒளிந்து கொண்டாலும்,
தேடிவந்து உங்களைசந்திக்
கும் ஆற்றல் கொண்டது!
வீஷ்


உள்ளே சென்ற தோட்டா வெடித்துச்
சிதறியது!
டமால்
ஆஆவ்...வ்! ஏதோ
வெடித்துச் சிதறு
கிறது!
ஒரே புகை மயம்—! வா
வெளியே ஓடிப்போய்
விடலாம்!


கிளைடரின் வேகத்தை குறைத்து நிலைப் படுத்தினான் ஸாண்டி. அதையடுத்து—
வெளியே பாய யத்தனிக்கிறான்...!
அவனுக்கென்ன பைத்தியமா?


ஸாண்டி பாய்ந்தான்...
சர்ரக்!
நேரில் வந்து உங்களை சந்திக்க தீர்மானித்து விட்டேன்டா பயல்களா...!


உள்ளே இருந்து வெளியேறிய இரு அயோக்கியர்களும் புது பிரச்னையை எதிர் கொண்டனர்..
கிட்டே வராதீர்கள்— தொலைத்து விடுவோம்!
டுமீல்
டைஸன் — குனிந்து கொள்ளுங்கள்! சுடுவதில் கைதேர்ந்தவர்கள் என்று தோன்றுகிறது!
டுமீல்! டுமீல்!
பதுங்கியவாறு வெளியேறி மறைவிடத்தை நோக்கி ஓடுங்கள்... உங்களை காப்பாற்றுவது என் முதல் கடமை!
அப்போது—எதிரிகளின் தலைக்கு மேலே 'கிறீச்' என்று ஓசை எழுந்தது...
ஐயோ... ஸாண்டியை கவனித்து விட்டனர்...
ஓ... இங்கே மேலே தான் இருக்கிறாயா... சுட்டு வீழ்த்துகிறேன் பார்!


நேர் கீழே நின்றுகொண்டி ருந்தமைக்கு நன்றி!
அஹ்...ஹ்!
டமீல்!
ஆவ்வ்...வ்!


டைஸனுக்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை
ஓடி வா ஜோ... — ஸாண்டிக்கு ஆபத்து!
ஆபத்தா...? நோ — ! ஜாலியாக விளையாடிக்கொண்டிருக்கிறான்... நீங்கள் உள்ளே புகுந்து ஆட்டத்தைக் கெடுத்து விடாதீர்கள்!


ஸாண்டி துப்பாக்கியை பயன்படுத்தலானான் —
ஊஹூம்.. அப்படியெல்லாம் ஓடித் தப்பவே முடியாது தோழர்களா — சரணடைவதுதான் விவேகம் என்று இன்னமும் புரியவில்லையா?
ரட்
டட
டட
நான் சரணடைகிறேன்!
ஆஆவ்... நா...நா நானும்தான்!


ஜோ... இந்த துப்பாக்கியை பிடி! எண்ணி இருபதுகேள்விகள் கேட்கப் போகிறேன்... இவர்களிடம்!
முதலில் அவர்களுடைய தலைவனிடம் நம்மை அழைத்துச் செல்லக் கோரி வற்புறுத்து!


அப்போது சற்றுத் தொலைவில் ஓர் உருவம் மெள்ள நகர்ந்தது...
ஸாண்டி! ஜோ! அதோ அங்கே கரும் பூதம்!
இந்த தடவை என்னுடைய முறை ஸாண்டி! அவனை என்ன செய்கிறேன்— பார்!


ஜோ அந்த உருவத்தை குறி வைத்து பாய்ந்தபோது—
அட... மாயமாக மறைந்துவிட்டதே!
இதுவும் ஒரு சூழ்ச்சிவேலை அருகே பாழடைந்த கிணற்றை போலியாக மூடி வைத்திருக்கிறான்!
மின்னல் வேகத்தில் செயல்பட்டு அசம்பாவிதத்தை தவிர்த்து விட்டான் ஜோ...
ஒரு கை கொடு... அப்பனே!
இந்தா—சீக்கிரம் வெளியேறும் வழியைப் பார்!
ஜோ ஒருவழியாக மேலேறி வந்து சேர்ந்தபோது அவர்களுடைய ஜீப் உறுமியது...
தப்பிச் செல் கிறார்கள்...
ஜீப்பை கிளப்பிக்கொண்டு போய் விட்டார்களா...?


தங்களுடைய மோட்டார் சைக்கிளை விட்டுப்போய் இருந்தனர்..
இன்னமும் அவர்களை கேள்வி கேட்கும் எண்ணம் இருக்கிறது— ஏறிக்கொள், பின்னால்!
டைஸன், இங்கேயே இருங்கள்...! ஒருவேளை கரும் பூதம் இங்கே வந்தால என்னசெய்ய வேண்டும் என்று உங்களுக்கே தெரியும்!


மறுகணம்—
சாலையை விட்டு விலகி எங்கே போகிறாய்?
ர்ர்ர்ர்ர்
குறுக்குவழி இது! இறுக பற்றிக் கொண்டு விடு!


அயோக்கியர்கள் சப்தம் கேட்டு திரும்பி பார்த்தனர்...
நெருங்கி விட்டார்கள் வேகமாகபோ! இந்த ஜீப் இன்னும் வேகமாகப் போகும் திறன் கொண்டது!
இன்னும் வேகமாக போ—விடாதே...!
ஆ. ஐயோ!


காய்ந்து கிடந்த நீரோடை ஒன்றை
கண்டதும் ஜோ வேறொருதிட்டமிட்டான்..:
இதன்வழி சென்றால் சாலையில் அவர்களை முந்திக கொண்டு விடலாம்..நம்மை காணோம் என்றதும், எங்கோ மோதிக கொண்டுவிட்டோம் என்று அலட்சியமாக இருப்பார்கள்!
ஆனால் நீ போகிற போக்கைப்பார்த்தால் நிஜமாகவே மோதிக் கொண்டு விடுவோம் போலிருக்கிறதே!


பாலத்தின் மீது ஜீப் விரைந்தபோது—
அவர்களைக் காணோம்— எங்கேயாவது மோதிக் கொண்டிருப்பார்கள்...!
ஆமாம் ..அதிர்ஷ்டம் நம் பங்கில்இருப்பதாக தோன்றுகிறது!


அவன் இதைச்சொல்லி வாயை மூடுமுன் —
குதி ஸாண்டி...! இலக்கை சரியாக குறிவைக்க நீ தவறினால் மருத்துவ மனையில் மாதக்கணக்கில் படுத்துக் கிடக்க வேண்டி வரலாம்.. மறந்து விடாதே!
மருத்துவமனையில் வீசும் நெடி எனக்கு பிடிப்பதேயில்லை..!
ஐயோ — அவர்களே தான்...


இதற்கிடையே — அங்கே... கலவரத்தோடு நின்றுகொண்டிருந்தார் டைஸன்..
ஸாண்டியும், ஜோவும் சீக்கிரம் திரும்பி வந்துவிட்டால் நல்லது. எந்த விநாடியும் ஏதாவது அசம்பாவிதம் நிகழ்ந்து விடும் அபாயம் உண்டு!


ஹே...! ஜீப்பில் 'லிப்ட்' கிடைக்குமா— தம்பிகளா!
நிறைய இடம்தான் இருக்கிறதே! மறுக்க மாட்டார்கள்! அவர் களுக்கு உன் நன்றியை தெரிவிக்க மறந்து விடாதே!
மறுகணம்—
எங்களுடைய ஜீப்பை இப்போது நீங்கள் என் னிடம் திரும்ப ஒப்படைத்து விடலாமே...?
ஆஆஹ்...ஹ்!


சாலையை விட்டு விலக்கி ஜீப்பை ஓட்டிச் செல்ல என்ன அவசியம் வந்ததோ.. புரியவில்லை எனக்கு!
ஒரே நேரத்தில் மூன்றுபேர் ஜீப்பை ஓட்டும் பொறுப்பை மேற்கொண்டால் இம்மாதிரி அசமபாவிதங்கள் தவிர்க்கப் படுவதற்கில்லை... ஜோ!


ஜீப்பை நிறுத்தும் முயற்சியில் ஸாண்டி வெற்றி கண்டதும்—
ஹே..எங்கே ஓடப் பார்க்கிறாய்?
ஆட்டத்தில் பாதியில் ஓடினால் எப்படி?


அதையடுத்து—
சே.. ஆனாலும் நீ கொடுமைககாரன் ஸாண்டி! உன்னைசுட குறிவைத்தான் என பதற்காக இப்படியா செய்வது?
கும்!
வியர்வை நாற்றம் சகிக்க வில்லை- முதலில் குளித்து விட்டு வா... அப்பனே!
கரும் பூதத்தைப்பற்றி நாம கேட்கும் கேள்விகளுக்கு ஒழுங்கான பதில் வருமா... இவர்களிடமிருந்து?
பட்டது போதும்— தெரிந்தவரை விப ரம் சொல்கிறோம்.
ம்... இதுதான் நல்லபிள்ளைக்கு அடையாளம்!
நாங்கள் கரும் பூதத்தின் முகத்தை பார்த்ததே இல்லை... கடல் பறவை என்ற பெயரில் சிவப்பு - வெள்ளை விசைப்படகு ஒன்று அவனுக்கு சொந்தம்என்றஒரு விபரம்மட்டுமே எங்களுக்கு தெரியும்
அவன் எங்களையும் நம்ப வில்லை என்பதுதான் நிஜம்!



மறுகணம் ஜீப் பறந்தது—
விர்
டைஸன் இருக்கும் இடத்திற்கு உடனே நாம் திரும்ப வேண்டியது அவசியம்.. பாவம் தனியாக இருப்பார்
ர்ர்!
அப்படிப்பட்ட படகின் சொந்தக்காரன் யாரென்று டைஸனுக்கு தெரிந்திருக்கலாம்...
அங்கே- டைஸன் தனியாக இருக்கவில்லை...
மடார்!
ஆவ்...வ்!
கரும் பூதம் வேகமாக இயங்கியது-
பாரம்பரிய முறைப்படி, நீயும் ஒரு தற்செயலான விபத்தில் மாண்டு போகப் போகிறாய்— இன்னும் சில நிமிடங்களில்!
THE SEA BIRD


கடற்பறவை நீரைக் கிழித்துக் கொண்டு விரைந்தது...
இவன் சுயவுணர்வு பெறு முன் தீயை உருவாக்கிவிட வேண்டும்! படகுபாலத்தை நெருங்குமுன் கதை முடிந்து விடும்!
THE SEA BIRD


ஆனால் டைஸனுக்கு உதவி விரைந்து வந்துகொண்டிருந்தது-
ஸாண்டி... அங்கே கவனி! 'கடல் பறவை' படகு! கரும் பூதம் ஓட்டிச் செல்கிறது!
அதற்காக ஏன் இப்படி கத்தித் தொலைக்கிறாய்?


சட்டென்று ஜீப்பை பின்புறமாகசெலுத்தினான் ஸாண்டி
ஐயோ...மறுபடியும் அந்த புயல்வேக இரட்டையர்களா?
திருப்ப இடமில்லைஇங்கே அதான் இப்படி!நாம உடனே படகுக்கு செல்ல வேண்டியது அவசியம்!
தாமதித்தால் டைஸனை காப்பாற்ற முடியாது போகலாம்!


இதற்கிடையே—
சுக்கானின் இயக்கத்தை கெடுத்து விட்டேன்... என்ஜினும் நீரோட்டமும் படகின் ஓட்டத்துக்கு துணைசெய்யும்-டைஸன் உன சரித்திரம் ஓரிரு நிமிடங்களில் முடிந்து விடும்— குட்.. பை


ஸாண்டி... படகு தீப் பற்றிக்கொண்டுவிட்டது பார்! உள்ளே, டைஸன் இருப்பது உறுதி!
நீர்வீழ்ச்சிப் பகுதியை நோக்கி விரைகிறது படகு.. விபரீதம் சம்பவிக்குமுன் படகைசென்றடைய அவகாசம் இல்லையே— என்ன செய்வது?
DANGER! TALON WEIR AHEAD. NO BOAT PAST THIS POINT


அலட்டிக் கொள்ளாதே- ஜீப்பை பாலத்தின்மீது விடு சொல்கிறேன்!
என்ன செய்யப் போகிறாய்...'
ஜீப் நின்றதும் பாலத்தின் கைபிடி சுவரினமீது தாவினான் ஜோ - கணமும் தாமதியாமல்...
பார்த்துக் கொண்டே யிரு-படகுக்கு செல லப்போகிறேன்!
மருத்துவமனைக்கு போய் சேராமலி ருந்தால் சரி...!


படகில் யாரோ இருக்கிறார்கள்- அது டைஸனாக இருக்கலாம்!
அதில் சந்தேகமே யில்லை எனக்கு!


பாலத்தின் நேர் கீழாக படகு வந்தபோது—
டார்ஜானாக 'டூப்' ஏற்று நடித்திருககிறேன். யோசிக்க அவகாசம் இருந்திருந்தால ஒருவேளை மிரடசியடைந் திருப்பேன்!
BIRD


நீர்வீழ்ச்சியை படகு நெருங்கிவிட்டது—
ஓரிரு விநாடிகள் தாமதித்திருந்தாலும் டைஸனை படகிலிருந்து வெளியேற்ற முடியாது போயிருக்கும்!
இப்போது மின்னல் வேகத்தில் ஏதாவது யுக்தியைக் கையாண்டாலன்றி அவர்கள் இருவருமே பலியாகிப்போவது நிசசயம்!
இந்தா... இதைப் பிடித்துக்கொள் ஜோ!
போடு... இங்கே விறைத்துப் போகிறமாதிரி குளிர்கிறது, தண்ணீர்!


ஸாண்டியின் குறி கச்சிதமாக இருந்தது...
இறுக பற்றிக் கொள்!
இதை நீ சொல்லவே வேண்டாம். எனக்குப் பின்னால் நிகழும் அசம்பாவிதத்தை திரும்பிப் பார்க்க அவகாசம் இல்லை என்ற வருத்தம் எனக்கு!
THE SEA
நீர்வீழ்ச்சியில் கர்ணம் அடித்து நழுவியது படகு...
எல்லாம் அந்த கரும் பூதத்தின் விஷமம்தான்!
என் தலையில் அடித்து மயக்கமுறச் செய்தான் முதலில்!
மிச்சக்கதையை பிறகு பேசிக் கொள்வோமே-- முதலில் மேலே வாருங்கள்!


பின்னர் — நீர்வீழ்ச்சியின் கீழ் பகுதியில்...
ஏ..ஏ .ஏன் ஸாண்டியை பிடித்து உள்ளேதள்ளு கிருய்?
அவனும்தான் ஜாலியாககுளித்து விட்டு வரட்டுமே! அறபுதமான நீசசல வீரன் அவன்..! 'கடல் பறவை'யினுள் புகுந்து ஏதாவது தடையம் கிடைக்கிறதா என்று பார்ககட்டும்!
ஜோ...எ.. என்ன இது?


படகின் பெட்டக அறையிலிருந்து உருப்படியான தகவலகள் தரும குறிபபேடுகள் நிறைய மீடகபபட்டன....
கரும் பூதத்தின் சதித்திட்டம் பறறிய விபரங்களை அறிந்து கொளள இவை பெரிதும் உதவக் கூடும்.


டைஸனின் மாளிகைக்கு திரும்பிய பின், தடயங்கள் அனைத்தும் ஆராயப்பட்டன...
புதிராக உள்ளது...! கால்பரி மியூசியத்தின் முழு வரைபடமும் பூதத்தின் வசம் வந்தது எப்படி?
ஏன் என்ற கேள்வியையும் சேர்த்துக் கொள்!
அங்கிருந்து ஒருமைல் தொலைவில்தான் இருந்தது அந்த மியூசியம்-நேரம் நள்ளிரவாகிவிட்ட போதிலும் மூவரும் உடனடியாக அங்கே சென்றடைந்தனர்...
சந்தடியற்றுக்கிடக்கிறது. சுற்றுவேலி கம்பிகளை ஜோ எவ்வளவு சுலபமாக வளைக்கிறான் பாருங்கள்.. டைஸன்!
...டைஸன், இம்முறை உங்களை தனியேவிட்டுச் செல்லப் போவதில்லை... நாங்கள்!
மியூசியத்தினுள் யாருமே இல்லை.. உள்ளே நுழைய ஸாண்டி வகை செய்தான...
வாருங்கள்...' யாராவது நம்மை பார்த்துவிட்டால் போச்சு-இரண்டு வருடம் தீட்டிவிடுவார்கள்!
கரும் பூதம் பார்த்தால்நம் கதையே முடிந்து விடும்!


கையில் அகப்பட்ட கழியால் பூதத்தை விளாசினுன்...
நீ பேசியதை நாங்கள் கேட்டதில்லை·இம்முறை நீ ஏமாற்றிச் சென்று விட முடியாது!


ஆனுல் ஸாண்டியின் தாக்குதல் அர்த்தமற்றதாகி விட்டது...
படார்!
சாத்தியமேயில்லை...! கழி உருவத்தை ஊடுருவி செல்கிறதே!


ஜோவும், டைஸனும் மேலே ஏறிவரும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்...
வேகமாக ஏறிவாருங்கள் டைஸன்.மேலே ஏதோ பேச்சு சப்தம் கேட்கிறது! ஸாண்டி அங்கே பூதத்தை சந்தித்திருக்க வேண்டும்!
சோதனைதான்!
என்ன நடந்தது என்று ஸாண்டிக்கு விளங்கி விட்டது...
ஜன்னல் வழியே உள்ளே நான் குதித்தபோது இந்தக கருவியின மீது இடித்துக் கொண்டேன்.
புரஜெக்டர் மாதிரி இருக் கிறது.கரும் பூதத்தின மாயத்தோற்றத்தை வெளிப்படுத்து கிறது...!
புரஜெக்டரின் இயக்கத்தை நிறுத்தினான் ஸாண்டி.
அட...மாயமாக மறைந்துவிட்டதே!
க்ளிக்
கரும் பூதத்தின் தந்திரம் இபபோது தெளிவாகி விட்டது இந்தக்கருவியை பயன்படுத்தி நம்மை ஏமாற்றி வந்திருக்கிறது.


அப்போது, திடீரென்று அங்கே ஒரு குரல் உரத்துககேட்டது...
அப்படியே நில்லுங்கள். யாரும் அசையக்கூடாது
நிஜமான அச்சுறுத்தல்...! மாயத் தோற்றமல்ல. அது நிஜ உருவம்!


ஆமாம் . நிஜமனிதன்தான் நான்! டைஸன் பரம்பரையில டைஸனுக்கு அடுதத வாரிசு நான்... இவன் செத தொழிந்தால திரண்ட சொத்துக் களுக்கு நான் சொநதக்காரனாகிவிடு வேன. கரும் பூதம்பற்றிய மூடநம் பிக்கை, எனககு இப்படியொரு சூழ்ச்சியை திட்டமிட தூண்டியது. என திட்டத்தை ஊடுருவிதோறக டித்த இரட்டையர்களை, முதலில் தீர்த்துக்கட்டப போகிறேன...


அப்போது திடீரென்று பளீரிடும் கறுப்பு உருவம் ஒன்று அந்த மர்ம மனிதனின் அருகே தோன்றியது
எ...எ...என்ன... இது...ஆ ஆ..
ஜோ... அவனை மடக்கு!
அவன் வடிவமைத்த கருவியை பயன்படுத்தி அவனையே ஏமாற்றி விட்டாயே பலே!


மறுகணம்--
ஓ. கே! இம்முறை நீ மாயமாக மறைந்து விட முடியாது!
குழப்பத்தில் புரஜெக்டர் வெளிப்படுத்திய மாயத் தோற்றத்தை நோக்கி பாய்ந்து விடுவாயோ என்று பதறிப் போனேன்!



நைலான்முக மூடியின் பின்னே இருப்பது யாரெனறு இப்போது தெரிந்துவிடும்·இதோ... ஆசாமி யார் எனறு அடையாளம் தெரிகிறதா டைஸன்?
இல்லை...! என் உறவினர் களில்பெரும்பாலோர்நல்ல முகவெட்டு உடையவர்கள். இவன் தூரத்து உறவாக இருக்கலாம்.




போலீஸார் பொறுப் பேற்றுக்கொண்ட பின் இரண்டு நாட்கள் கழித்து
மியூசியத்திலிருந்து உங்கள் மாளிகைக்கு இரகசிய சுரங் கப்பாதை இருபபதால் நினைத்தபோது வந்துபோக அவனுககு வசதியாகி விட்டிருககிறது!
அந்தக் கதை போதும்! டைஸனுக்காக அவரு டையபுது விசைப் படகை நாம் ஓட்டிச சேம்பியன் பட்டத்தை தட்டிக் கொண்டு வருவதைப் பற்றி விவாதிப்போம்...



சாம்பியன்ஷிப் போட்டியில் ஜோ, ஸாண்டி இருவருமே பங்கேற்றனர்...
அற்புதமாகப் போகிறது...!
மற்ற படகுகள் எல்லாம் வெகுதொலைவில் வரு கின்றன...
புயல்வேகஇரட்டையர் களை எட்டிப் பிடிக்க யாராலுமே முடியாது
யார் முதலில் வருவார் களோ ஜோவா, ஸாண்டியா?
டைஸன் தனக்குள் சிரித்துக் கொண்டார்
இருவருமே என் சார்பில் போட்டியிடுகிறார்கள் அவர்களில் யார் வென்றால் என்ன... எப்படியும் வெற்றி என்னுடையது!

# வாசகர் கடிதம்!

● **V. செல்வ ராஜ், திண்டுக்கல்.**

மரண சர்க்கஸ் அப்பப்பா- தூள் கிளப்பி விட்டது!

● **M. சிராஜ்தீன், திருப்பூர்-4**

மனக் குழப்பத்துடன் மரண சர்க்கஸை படித்தேன். முடியும் போது உள்ளம் உற்சாகக் கடலில் மிதந்தது.

● **A. ராஜா, உத்தமபாளையம்.**

மேஸன் மரண கிணற்றினுள் மோதாமல் தப்பித்த கட்டம் மிகவும் அருமை.

● **R. நாகராஜன், பக்கநாடு.**

மரண சர்க்கஸைப் படிக்கும் போது நெஞ்சில் ஒரு படபடப்பு. படகோட்டி கிச்சு பனிச்சறுக்கு ஹீரோவைப் படிக்கும் போது வாயில் ஒரு கலகலப்பு! புயல் இரட்டையரின் வருகையை கண்டு மனதில் ஒரு கிளுகிளுப்பு! மொத்தத்தில் மினி லயனே உணர்ச்சிகளின் குடியிருப்பு!

● **கிருஷ்ணப் பிரியன், மதுரை.**

அடுத்தது என்னவென ஆவலுடன் படிக்க வைத்தது மரண சர்க்கஸ். பனிச்சறுக்கு ஹீரோ நல்ல நகைச்சுவை. மினி லயன்-லயன் போல புகழ் பல பெற எனது மனங்கனிந்த இதய வாழ்த்துக்கள்.

● **A. M. மகாதேவன்,**
**அங்கண கவுண்டன்புதூர்.**

மரண சர்க்கஸ் சூப்பரோ சூப்பர். அன்புள்ள மினியே, உன் வெற்றிக் கொடி எவரெஸ்டில் பறக்க வாழ்த்துகிறேன்.

● **P. தண்டபாணி, நாகை.**

கார்ஸனை பிடிக்க மேஸன் செய்த சாகஸம் மயிர் கூச்செறிய வைத்தது. இது மோட்டார் சர்க்கஸ் போல இருந்தது. அட்டையில் வண்ணப்படம் சூப்பர்.


அடுத்த வெளியீடு!
மினி
லயன்
கானகவேட்டை!
ரூ. 1/-

## ஹி! ஹி!!



## ஹி! ஹி!!




சூப்பர் ஸ்டார்
ரோஜர் மூர்
திகில்!
எட்டு சூப்பர் சித்திரக்கதைகளு-
டன் மே 1ல் வெளிவரும் "திகில்"
கோடை மலரில் இவர் அறிமுக-
மாகிறார்! உங்கள் பிரதிக்கு
இன்றே பதிவு செய்து
கொள்ளுங்கள்!




சூப்பர் ஸ்டார்
ரோஜர் மூர்
திகில்!
எட்டு சூப்பர் சித்திரக்கதைகளுடன் மே 1ல் வெளிவரும் "திகில்" கோடை மலரில் இவர் அறிமுகமாகிறார்! உங்கள் பிரதிக்கு இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்!